**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 198 of 2022

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.ஜெயலட்சுமி

Date : 09.08.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்தேன். அந்த பதிலுரையில் ஏற்கனவே பாகபிரிவினை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்த பாகபிரிவினை பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகபிரிவினை பத்திரத்தில் வா.சா.ஆ.2 அது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தில் கையெழுதது போட்டு தரப்பினராக இருந்து அந்த பாகபிரிவினை பத்திரத்தில் பிரதிவாதிகள் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாக பாகம் கேட்டு இருக்கும் இந்த வழக்கு சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. என் தம்பிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் நான் மீணடும் பாகம் கேட்பது சட்டப்படி தவறானது என்றால் எனக்கு பாகம் பிரித்ததே தெரியாது. என் சகோதரர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் தான் அச்சகம், திருமண மண்டபம் கட்டியிருக்கிறார்கள் என்றால் பாகபிரிவினையே ஆகவில்லை. வில்லங்கம் போட்டு வாங்கி பார்த்த போது தான் பாகபிரிவினை பத்திரம் பற்றி தெரிய வந்தது. அதனால் தான்

நான் இந்த வழக்கை போட்டேன். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் ஏன் கையெழுத்து போட்டீர்கள் என்றால் நான் அதில் கையெழுத்தே போடவில்லை. என் அக்கா பழனியம்மாவும் அதில் கையெழுத்து போடவில்லை. அந்த பத்திரத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகள் கையெழுத்தும் என்னுடைய பேரும் அதில் உள்ளது. ஆனால் அதில் நான் கையெழுத்து போடவில்லை. லோன் போடுவதற்காக கையெழுத்து கேட்டார்கள். அதனால் நான் கையெழுத்து போட்டேன். வேறு எதற்காகவும் நான் கையெழுத்து போடவில்லை.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தான் நான் கையெழுத்து போட்ட பத்திரத்தின் நகல். அந்த பத்திரத்தில் எனது கணவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். ஆனால் எப்படி வாங்கினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. மண்டபம் கட்டுவதற்கு லோன் வாங்கவேண்டும் என்று சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். நான் எதுவும் லோன் வாங்கவில்லை. மண்டபம் கட்டுவதற்கு லோன் எனது அப்பா தான் வாங்கினார். எவ்வளவு தொகைக்கு லோன் வாங்கினார் என்று எனக்குதெரியாது. நான் லோன் வாங்கும் போது கூட போகவில்லை. மண்டபம் கட்டுவதற்கு 3, 4 பிரதிவாதிகள் தான் கடன் வாங்கி கட்டினார்கள் என்றாலும் எனது அப்பா கட்டவில்லை என்றால் சரியல்ல. லோனுக்கான தவணை எதுவும் நான் கட்டவில்லை. லோனுக்கான பணத்தை யார் திரும்ப கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

என்னிடம் யாரும் அதை பற்றி சொல்லவில்லை. தற்போது 3, 4 பிரதிவாதிகள் மண்டபத்தையும், பிரசையும் நடத்தி வருகிறார்கள். என் அப்பா இருந்த வரை அவர் நடத்தி வந்தார். என் அப்பா மண்டபத்தை கட்டவும் இல்லை, நடத்தவும் இல்லை என்றால் சரியல்ல. கடன் பத்திரம் என்று சொல்லி பாகபிரிவினைபத்திரத்தில் கையெழுத்து வாங்கியது சம்பந்தமாக நான்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அந்த பாகபிரிவினைபத்திரம் உண்மையானது என்பதால் தான் அதை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அந்த பாகபிரிவினை பத்திரம் பற்றியே தெரியாது. என் தந்தை உயிருடன் இருந்த போது சில சொத்துக்களை விற்று ஒவ்வொருக்கும் ரூ5லட்சம் பணம் கொடுத்தார் என்றால் என் அப்பா சொத்துக்களை விற்கவும் இல்லை, பணம் கொடுக்கவும் இல்லை. லட்சுமண செட்டியார் எனது சித்தப்பா. என் அப்பா, அம்மா குடியிருந்த வீட்டை பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது தாத்தாவின் வீடு. எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது.

அகிலன், கோவிந்தன் என்னுடைய உறவினர்கள் தான். என் சித்தப்பா அகிலன், கோவிந்தன் முன்னிலையில் 3, 4 பிரதிவாதிகள் அச்சகம் நடத்துவதால் அந்த வீட்டை அவர்களுக்கு ஒதுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் அம்மா, அப்பாவை நானும் சென்று பார்த்தேன். அவர்களும் என்னிடம் வருவார்கள். ஆனால்

அவர்களை கடைசி வரை சவரட்சனை செய்து பார்த்து கொண்டது 3, 4 பிரதிவாதிகள் தான். 3. 4 பிரதிவாதிகள் ஆண் பிள்ளைகள் என்பதாலும் அந்த வீட்டிலே குடியிருப்பதாலும் அவர்களுக்கு என்னுடைய அப்பாவால் வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அக்காக்கள் ஆன 1, 2 பிரதிவாதிகள் அவர்களின் மகள்களை 3, 4 பிரதிவாதிளுக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டார்கள். அவர்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறார்கள், 2ம் பிரதிவாதி அவருடைய கணவர் இறந்து விட்டதால் என் அப்பா, அம்மாவுடன் இருந்தார். என் சித்தப்பா லட்சுமணசெட்டியார் தலைமையில் நடந்த பஞ்சாயத்தில் குடும்ப ஏற்பாடு படி வீடு முழுவதும் 3, 4 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வீட்டின் அளவு 2400 சதுரடி. ஆனால் நீளம், அகலம் தெரியாது. வீடு எந்த திசையை நோக்கி அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. தற்போது 3, 4 பிரதிவாதிகள் அந்த இடத்தில் புதியதாக வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

தாவா சொத்துக்களில் எனக்கு 1/5 பாகம் வேண்டும் என்று கேட்கிறேன். வீட்டின் மொத்த அளவே 25 அடி என்பதால் அதை 5 பங்காக பிரிக்கமுடியாது என்றால் பிரிக்க வேண்டும் என்றால் பிரித்து தான் ஆக வேண்டும், பிரதிவாதிகள் எனக்கு நிலத்தை கொடுப்பதாக என்னிடம் நேரடியாக சொல்லவில்லை. அவர்களுடன் வந்தவர்கள் ஏரி பக்கத்தில் நிலத்தை கொடுப்பதாக சொன்னார்கள். பிறகு பிரதிவாதிகள்

அதையும் கொடுக்க மறுத்து விட்டார்கள். தாவா சொத்தில் உள்ள வீடு 3, 4 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்றாலும் வீட்டிற்கான ஆவணங்கள் எல்லாம் 3, 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளதால் அந்த வீட்டில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வங்கியில் கடன் வாங்கி 3, 4 பிரதிவாதிகள் வீட்டை கட்டினார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா வைத்திருந்த பணத்தில் தான் வீட்டை கட்டினார்கள். என் அப்பா எவ்வளவு பணம் வைத்திருந்தார் என்று என்னிடம் சொல்லமாட்டார். என் அப்பா அவர் இறக்கும் போது பணம் எதுவும் விட்டு விட்டு செல்லவில்லை என்பதால் நான் பணத்தில் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறந்து ஒரு வருடத்திலே வீடு கட்ட ஆரம்பித்து விட்டார்கள். நான் எனது அப்பாவிடம் பாகம் கேட்டேன். என் மகளுக்கு திருமணம் ஆகும் போது கொடுப்பதாக சொன்னார். அதன் பிறகு நான் பாகம் கேட்கவில்லை. என் அப்பா இறந்த பிறகு 3, 4 பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டேன். என் அப்பா இருக்கும் போது கொடுப்பதாக சொன்னார்கள். தற்போது கொடுக்க மாட்டோம் என்று சொன்னார்கள். ஊர்காரர் யாரையும் வைத்து நான் பாகம் கேட்கவில்லை. தாவா சொத்தில் இருந்து வரும் வருமானத்திலிருந்து எனக்கு 15,70,000பாகம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். மொத்த வருமானமே நான் கேட்டிருப்பது போல் வரவில்லை என்றும் நான் பொய்யான வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா

சொத்தில் எந்த பாகஉரிமையும் இல்லை என்றால் சரியல்ல.  தாவா செலவு தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.